நான் கிறிஸ்துவுக்குள் விலையேறப்பெற்றவன்

நான் பூமிக்கு உப்பாகவும், உலகத்திற்கு வெளிச்சமாகவும் இருக்கிறேன்.[1]

நான் மெய்யான திராட்சை செடியின் கோடி, அவரில் நிலைத்திருப்பதால் நான் அதிக கனி கொடுக்கிறேன்.[2]

நான் நிலைத்திருக்கும் கனியை கொடுக்கும்படிக்கு தெரிந்துகொள்ளப்பட்டுள்ளேன்.[3]

நான் கிறிஸ்துவின் சாட்சியாய் இருக்கிறேன்.[4]

நான் தேவனுடைய ஆலயம், தேவனுடைய ஆவியானவர் எனக்குள் வாசமாய் இருக்கிறார்.[5]

நான் தேவனுக்கு முன்பாக ஒப்புரவாகுதலின் ஊழியனாய் இருக்கிறேன்.[6]

நான் தேவனுடைய உடன் வேலையாளாக இருக்கிறேன்.[7]

நான் கிறிஸ்துவுடன் உன்னதங்களில் வீற்றிருக்கிறேன்.[8]

நான் நற்கிரியைகளைச் செய்கிறதற்கு கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறேன். அவைகளில் நான் நடக்கும்படி தேவன் முன்னதாகவே அவைகளை ஆயத்தம்பண்ணி இருக்கிறார்.[9]

நான் கிறிஸ்துவில், அவரைப் பற்றும் விசுவாசத்தால் தேவனிடத்தில், தைரியத்துடனும் திடநம்பிக்கையுடனும் சேர முடியும்.[10]

என்னை பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே, ஏன்னால் எல்லாம் செய்ய கூடும்.[11]

[1] மத். 5:13,14
[2] யோவான் 15:1,5
[3] யோவான் 15:16
[4] அப். 1:8
[5] 1 கொரி. 3:16
[6] 2 கொரி. 5:18–21
[7] 2 கொரி. 6:1
[8] எபே. 2:6
[9] எபே. 2:10
[10] எபே. 3:12
[11] பிலி. 4:13

மத்தேயு 5:13,14

நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்; நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்;

யோவான் 15:1,5

நான் மெய்யான திராட்சச்செடி, என் பிதா திராட்சத் தோட்டக்காரரர். நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது.

யோவான் 15:16

நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை, நான் உங்களைத் தெரிந்துகொண்டேன்; ...நீங்கள் போய்க் கனிகொடுக்கும்படிக்கும், உங்கள் கனி நிலைத்திருக்கும்படிக்கும், நான் உங்களை ஏற்படுத்தினேன்.

அப்போஸ்தலர் 1:8

பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்.

1 கொரிந்தியர் 3:16

நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா?

2 கொரிந்தியர் 5:18

இவையெல்லாம் தேவனாலே உண்டாயிருக்கிறது; அவர் இயேசுகிறிஸ்துவைக்கொண்டு நம்மைத் தம்மோடே ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை எங்களுக்கு ஒப்புக்கொடுத்தார்.

2 கொரிந்தியர் 6:1

தேவனுடைய கிருபையை நீங்கள் விருதாவாய்ப் பெறாதபடிக்கு, உடன்வேலையாட்களாகிய நாங்கள் உங்களுக்குப் புத்திசொல்லுகிறோம்.

எபேசியர் 2:6

கிறிஸ்து இயேசுவுக்குள் அவர் நம்மிடத்தில் வைத்த தயவினாலே, தம்முடைய கிருபையின் மகா மேன்மையான ஐசுவரியத்தை வருங்காலங்களில் விளங்கச்செய்வதற்காக,

எபேசியர் 2:10

னெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம்பண்ணியிருக்கிறார்.

எபேசியர் 3:12

அவரைப் பற்றும் விசுவாசத்தால் அவருக்குள் நமக்குத் தைரியமும் திடநம்பிக்கையோடே தேவனிடத்தில் சேரும் சிலாக்கியமும் உண்டாயிருக்கிறது.

பிலிப்பியர் 4:13

என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு.

For more copies of this bookmark please contact a Derek Prince Ministries office below.

DPM-India (English)
admin@derekprince.in
derekprince.com/en-in

DPM-India (Tamil)
admin@derekprince.in
www.derekprince.com/ta

DPM-Asia/Pacific
enquiries@dpm.co.nz
www.derekprince.com/en-nz

DPM-Australia
enquiries@au.derekprince.com
www.derekprince.com.au

PC 20